No. of Printed Pages : 4 **DECE-1**

# DIPLOMA IN EARLY CHILDHOOD CARE AND EDUCATION (DECE)

## Term-End Examination

## December, 24

### DECE-1 : ORGANIZING CHILD CARE SERVICES

*Time : 3 Hours* *Maximum Marks : 100*

அச்சடிக்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை : 4 **DECE-1**

# ஆரம்பகால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியில் டிப்ளோமா (DECE)

## கால-முடிவு தேர்வு

## டிசம்பர்- 2024

### DECE-1 : குழந்தை பராமரிப்பு சேவைகளை ஏற்பாடு செய்தல்

*நேரம் : 3 மணி நேரம* *உயர்ந்தபட்ச மதிப்பெண்கள் : 100*

---

குறிப்பு: கட்டாயம் கேள்வி எண். 1-க்கு பதிலளிக்க வேண்டும். ஏதேனும் நான்கு கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

---

1. (a) பின்வருவது நான்கு வயது குழந்தைகளின் ஒரு குழுவுக்கென ஒரு முன்பருவக் கல்வியாளரால் மூன்று நாட்களுக்கு உருவாக்கப்பட்ட செயல்பாடுகளின் அட்டவணையாகும். திட்ட அட்டவணையின் கொள்கைகளின்படி, இந்த அட்டவணை

P. T. O.

குழந்தைகளுக்கென பொருத்தமானதா என்பதை தீவிரமாக பகுப்பாய்வு செய்து, உங்கள் பதிலை விரிவாக நியாயப்படுத்தவும்: 15

| நேரம் | தி | செ | பு |
|---|---|---|---|
| 9 a.m. - 9.30 a.m. | குழந்தைகள் வருகின்றனர், வரவேற்பு, பிரார்த்தனை, உடற்பயிற்சி | | |
| 9.30 a.m.- 10 a.m. | ரைம்ஸ் | பொம்மலாட்டம் | குழந்தைகள் கதை சொல்லுதல் |
| 10 a.m. - 10.30 a.m. | கதை வருணனை | பொம்மலாட்டத்தை ஆதாரமாகக் கொண்ட ரோல் பிளே | ம்யூசிக் மற்றும் உடல் அசைவு ஆதார நடவடிக்கைகள் |
| 10.30 a.m. - 11 a.m. | கதை ஆதார ரோல் ப்ளே | ரைம்ஸ் | ரைம்ஸ் |
| 11 a.m. - 11.30 a.m. | சிற்றுண்டி இடைவேளை | | |
| 11.30 a.m. - 12 noon | பிளாக்குகள், ஜிக்சா புதிர்கள், பொம்மைகளுடன் உட்புற சுதந்திர விளையாட்டு | உட்புற சுதந்திர விளையாட்டு பிளாக்குகள், ஜிக்சா புதிர்கள், பொம்மைகள் | உட்புற சுதந்திர விளையாட்டு பிளாக்குகள், ஜிக்சா புதிர்கள், பொம்மைகள் |
| 12 noon - 12.30 p.m. | குட் பை | | |

(b) குழந்தைகளுக்கான பின்வரும் விளையாட்டு நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, விளையாட்டு நடவடிக்கை மூலம் முதன்மையாக ஊக்குவிக்கப்பட்டும் வளர்ச்சியின் களத்தை குறிப்பிடவும். உதாரணத்துக்கு, உங்களுக்காக முதல் நடவடிக்கை செய்து காட்டப்பட்டுள்ளது: 5

| நடவடிக்கை | விளையாட்டு நடவடிக்கை மூலம் ஊக்குவிக்கப்பட்டும் வளர்ச்சியின் களம் |
|---|---|

முத்துக்களை ஒரு சரத்தில் கோர்த்தல் - ஃபைன் மோட்டார் டெவலப்மெண்ட்

(i) ரோல் ப்ளே

(ii) வித்தியாசமான நிறங்களிலுள்ள கார்டுகளை பொருத்துதல்

(iii) கதை வரிசையில் அடுத்த கார்டை அடையாளம் காணுதல்

(iv) விவாதத்தில் பங்கேற்றல்

(v) வரைதல்

2. (a) 'அறிவாற்றல்' என்ற சொல்லை விளக்கவும். 5

(b) ஒரு வயது குழந்தைக்கு அறிவாற்றல் திறன்கள் இருப்பதைக் காட்ட *மூன்று* உதாரணங்களை தரவும். ஒவ்வொரு உதாரணத்திலும் தெளிவாகப் புலப்படும் குறிப்பிட்ட அறிவாற்றல் திறனை குறிப்பிடவும். 15

3. (a) வாழ்க்கையின் முதல் இரண்டு ஆண்டுகளில் மொழி வளர்ச்சியின் படிப்படியான கட்டங்களை உதாரணங்களுடன் விளக்கவும். 15

(b) முன் -பள்ளி குழந்தைகளின் மொழி வளர்ச்சியை வளர்க்க உதவும் விளையாட்டு சார்ந்த செயல்பாடுகளை விவரிக்கவும். 5

4. (a) ஒரு குழந்தை தனது வீட்டில் ஒரு விதியை மீறியது என்றால் அதற்கு பெற்றோர் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதை விளக்குங்கள் ;

(i) பெற்றோர் பாசத்துடன் குழந்தையிடம் ஒழுக்கத்தை வளர்த்தால்.

(ii) பெற்றோர் அதிகாரம் சார்ந்த ஒழுக்கத்தை பின்பற்றினால்.

எது மிகவும் பயனுள்ள முறை மற்றும் ஏன்? 5+5+5

(b) புதியவர்களைக் கண்டால் கவலை உண்டாதல் என்றால் என்ன மற்றும் அது எப்பொழுது உண்டாகிறது? 5

5. (a) பின்வரும் ஒவ்வொன்றுக்குமான ஒரு பொருத்தமான விளையாட்டு நடவடிக்கையை கூறவும்: 2x5=10

(i) ஐந்து வயது குழந்தைகளில் அறிவாற்றல் திறனை வளர்த்தல்

(ii) மூன்று வயது குழந்தைகளில் அறிவாற்றல் திறனை வளர்த்தல்

ஒவ்வொரு நடவடிக்கை மூலமும் வளர்க்கப்படும் அறிவாற்றல் வளர்ச்சியின் குறிப்பிட்ட அம்சத்தை குறிப்பிடவும்.

(b) ஒரு முன் -பள்ளி கல்வியாளர் தனது நான்கு வயது குழந்தைகளின் குழுவை ரயில்நிலையத்தை காண்பிக்க அழைத்துச் சென்றார். இந்த பயணம், எந்தெந்த துறைகளில் குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவியது என்பதை நியாயப்படுத்தவும். 10

6. (a) ஒரு முன் -பள்ளி மையத்தின் பாடத்திட்டத்தை மதிப்பீடு செய்யும் போது நீங்கள் மனதில் கொள்ள வேண்டிய ஏதேனும் நான்கு அம்சங்களை விவாதிக்கவும் மற்றும் இந்த அம்சங்களின் முக்கியத்துவத்தை விளக்கவும். 16

(b) நிகழ்வுப்பதிவுகள் என்றால் என்ன என்று விளக்கவும். 4

7. பின்வரும் ஏதேனும் இரண்டு குறித்து குறிப்புக்கள் எழுதவும்: 2x10=20

(a) முன்பள்ளிக் குழந்தையின் பாதுகாப்புத் திறன்

(b) முன் - பள்ளி பாடத்திட்டத்தில் இசை மற்றும் அசைவு நடவடிக்கைகளின் முக்கியத்துவம்

(c) ஒரு முன் - பள்ளியில் செயல் நடவடிக்கை பகுதிகள் அல்லது மையங்கள்

(d) குழந்தை பராமரிப்பு மைய நடவடிக்கைகளில் பெற்றோரை ஈடுபடுத்தும் வழிகள்.